அன்பே சிவம்

ANBE SIVAM

திருச்சிற்றம்பலம்

# ஐந்தாம் திருமுறை

## பழையாறை வடதளி




## அப்பர் அற்புதம் – சமணர்களால் மறைக்கப்பட்டு அப்பரால் உண்ணாநோன்பிருந்து வெளிப்படுத்தப்பட்ட பெருமான் வீற்றிருக்கும் தலம்

கும்பகோணம் - ஆவூர் பாதையில் முழையூர் சென்று அவ்வழியாக இத்தலத்தை அடையலாம்.

சோழ மன்னர்களின் தலைநகர்களுள் ஒன்றாக விளங்கிய தலம். பல்லவ மன்னவர்க்கு அடங்கிச் சோழர்கள் சிற்றரசாக இருந்த காலத்தில் அவர்கள் வாழ்ந்த இடம் பழையாறை பிற்காலச் சோழர் ஆட்சியில் இவ்வூர் இரண்டாவது தலைநகரமாயிற்று. சோழர் அரண்மனை இருந்த இடம் "சோழமாளிகை" என்னும் தனி ஊராக உள்ளது.

தேவார காலத்தில் (1) முழையூர் (2) பட்டீச்சரம் (3) சத்திமுற்றம் (4) சோழமாளிகை ஆகிய நான்கு ஊர்களும் சோழர்களின் நாற்படையூர்களாக விளங்கின. இவ்வூர் (1) A.H. 7 ஆம் நூறறாண்டில் - பழையாறை நகர் என்றும், 8 ஆம் நூற்றாண்டில் - நந்திபுரம் என்றும், 9,10ஆம் நூற்றாண்டில் முடிகொண்ட சோழபுரம் என்றும், 12 ஆம் நூற்றாண்டில் இராஜபுரம் என்றும் வழங்கப்பெற்றது.

பழையாறை நான்கு சிறு பிரிவுகளாகும்.

1) வடதளி - தாராசுரத்திலிருந்து 5 A.e. தொலைவு, அப்பர் உண்ணாவிரதமிருந்த இடம். தற்போது அதிக வீடுகளில்லை. சிதலமான கோயில் உள்ளது. கோயிலுக்குப் பக்கத்தில் துறையூர் சிவப்பிரகாசர் சமாதியுள்ளது.

2) மேற்றளி

3) கீழ்த்தளி (பழையாறை)

4) தென்தளி.

இத்தகு சிறப்புடைய இவ்வூர் சிற்றூராகவுள்ளது. தெற்கிலும் வடக்கிலும் முடிகொண்டான் ஆறும், திருமலைராயன் ஆறும் ஓடுகின்றன. முடிகொண்டான் ஆறு முற்காலத்தில் பழையாறு எனப்பட்டதால் அதன் கரையிலுள்ள ஊர் பழையாறை வடதளி எனப்பட்டது.

சமணர்களால் மறைக்கப்பட்டு அப்பரால் உண்ணாநோன்பிருந்து வெளிப்படுத்தப்பட்ட பெருமான் வீற்றிருக்கும் தலம். மங்கையர்க்கரசியார், அமர்நீதி நாயனார் ஆகியோர் அவதரித்த தலம. அப்பர் பாடல் பெற்றது.

மங்கையர்க்கரசியார் - இவர் மணிமுடிச் சோழனின் மகள் என்பர். இவன் பழையாறைத் தலைநகராகக் கொண்டவன் இவனே அப்பர் பொருட்டுச் சிவலிங்கத்தை வெளிப்படுத்தியவனாக இருக்க வேண்டும். திருப்பனந்தாளில் சாய்ந்த சிவலிங்கத்தை நிமிர்த்த முயன்றவனும் இவனேயாகும். (திரு. கே.எம். வேங்கடராமையா அவர்களின் ஆய்வுக்குறிப்பு - பெரிய புரணாம் - பட்டுசாமி ஓதுவார் பதிப்பு.)

வடதளி - (மாடக்கோயில்)
இறைவன் - தர்மபுரீஸ்வரர்
இறைவி - விமலநாயகி.
இதன் பக்கத்தில் முழையூர் (வைப்புத்தலம்) உள்ளது. மக்கள் இக்கோயிலை முழையூர்க் கோயில் என்று வழங்குகின்றனர்.

பழையாறை -
இறைவன் - சோமேசர்.
இறைவி - சோமகலாம்பிகை.
தலமரம் - நெல்லி.
தீர்த்தம் - சோம தீர்த்தம் (எதிரில் உள்ளது. இக்குளத்துநீர் சித்தப்பிரமை முதலியவைகளைப் போக்கவல்லது) கருடன், ஆதிசேஷன் வழிபட்ட தலம்.

பழையாறையில் நாணயச் சாலை இருந்த இடம் இன்று 'கம்பட்ட விசுவநாதர்' ஆலயம் உள்ள இடமென்பர். (கம்பட்டம் - நாணயச் சாலை) இராஜராஜ சோழனார் திருப்பணி செய்யப்பட்ட இக்கோயில் அவனுடைய இயற்பெயரால் அருண்மொழித் தேவேச்சரம் என்றழைக்கப்படுகிறது. குந்தவைப் பிராட்டி இவ்வூரில்தான் இராஜேந்திரனை வளர்த்தான். இத்தகு சிறப்புடைய பழையாறை, பாண்டியர் ஆதிக்கம் மேலோங்கியபோது தன் சிறப்பை இழந்தது.

இக்கோயில் சோழர் திருப்பணி பெற்றது. கிழக்கு பார்த்த சந்நிதி. எதிரில் குளம். இன்று சீர்கெட்டுள்ளது. வெளிப்பிராகாரத்தில் அம்பாள் கோயில் தெற்கு நோக்கியுள்ளது. கோயில்முன் மண்டபத்தில் உள்ள கைலாசநாதர் உருவமும், மகாமண்டபத்தில் உள்ள துர்க்கை உருவமும் அழகுடையன. இத்தலத்தைச் சூழ்ந்துள்ள (1) நல்லூர் (2) வலஞ்சுழி (3) சத்திமுற்றம் (4) பட்டீச்சரம் (5) ஆவூர் என்னும் ஐந்து தலங்களையும் ஒரே நாளில் தக்ஷிணாயன புண்ணியநாளில் - வழிபடுவது சிறப்புடையதென்று மக்கள் வழக்கில் சொல்லப்படுகிறது.

பதிக வரலாறு :



திருநாவுக்கரசர் ஆவடுதண்துறையார் பாதமணைந் திறைஞ்சி ஞானபோனகர்க்குச் செம்பொன் ஆயிரம் பாவுக் களித்த திறம் போற்றிப் பழையாறை செல்பொழுதின் அமணர் மறைத்த வடதளியின் மன்னுஞ் சிவனாரைத் தொழுதருள அமணர்கள் தம் பொய்கொள் விமானம் எனக் கேட்டு உளம் பொறாது புழுங்கி ஆங்கோரிடத்திருந்து கொன்றைமுடியார் செய்ய கழல் உன்னி ` வண்ணங்கண்டு நான் உம்மை வணங்கி யன்றிப் போகேன்` என்று அமுது செய்யாதே இருந்தார்.

அண்ணலாரும் அது உணர்ந்து மன்னனுக்கு `அறிவிலமணர் நமை மறைய இருந்தோம்` என்று அங்கு அடையாளக் குறிகள் அருளிச்செய்து ` நம்மையரசு கும்பிடுவான் நெறியிலமணர் தமை யழித்து நீக்கிப் போக்கு ` என்று அரசனுக்கு அருள்புரிய , அவனும் அறிவுற்று எழுந்து இறைஞ்சி மந்திரிகட்கு இயம்பிக் கடிது எய்தி அடையாளத்தின்வழி கண்டு அமணர் தூரறுத்தான் . பின்னர் அரசன் ஈசர்க்கு விமானம் ஆக்கி வழிபாட்டர்ச்சனைக்கு நிவந்தமெல்லாம் அமைத்திறைஞ்ச ஞானவரசும் சென்று இறைஞ்சிப் போற்றியருளியது இத் திருப்பதிகம் . ( தி .12 திருநா . புரா . 294. 300.)

**தலையெ லாம்பறிக் குஞ்சமண் கையருள்**
**நிலையி னான்மறைத் தான்மறைக் கொண்ணுமே**
**அலையி னார்பொழி லாறை வடதளி**
**நிலையி னானடி யேநினைந் துய்ம்மினே. 01**



பொழிப்புரை :

தலைமயிரெல்லாவற்றையும் பறிக்கின்ற சமண் ஒழுக்கம் உடையவர்கள் உள்ளத்து நிலையினால் மறைத்தால் மறைக்கவியலுமோ ? அலைநீரின் மருங்கிலுள்ள பொழில்கள் சூழ்ந்த பழையாறைவடதளியின்கண் நிலைபெற்றவன் திருவடிகளையே நினைந்து உய்வீர்களாக.

குறிப்புரை :

கையர் - வஞ்சனையுடையவர்கள். தலையெல்லாம் - தலையிலுள்ள உரோமங்கள் எல்லாவற்றையும். தலை - ஆகுபெயர். பறிக்கும் - ஒவ்வொன்றாகக் களையும். தலைமயிரைப் பறித்தல் சமணர் இழிவழக்கு. சமண்கையர் - கையையுடைய சமணர். கை - ஒழுக்கமுமாம். உள்நிலையினால் - தங்கள் பொய்மை நிலைமையினால்.

மறைத்தால் - மறைக்க முயற்சித்தால். மறைக்கொண்ணுமோ - மறைத்தற்கியலுவதொன்றாமோ. ஏகாரவினா எதிர்மறை குறித்தது. அலையினார் - அலைகள் பொருந்திய ; நீர்வளம் சான்ற. அலை - ஆகு பெயர் அல்லது அலைக்கண்மருங்கே என்க. நிலையினான் - எழுந்தருளி இருப்பவன். சமணர்கள் பழையாறை வடதளித் திருக்கோயிலில் இருந்த பெருமானை மறைத்து வைத்திருந்தகாலையில், அங்குச் சென்ற அப்பர், பெருமானைக் காணாது உண்ணாநோன்பு கொண்டு பின்பு இறைவன் காட்சிதரப் பாடியதாதலின் இப்பாடலில் மறைத்தால் மறைக்கவொண்ணுமோ என்றார்கள். (thevaaram.org)

திருச்சிற்றம்பலம்